தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஜூலை 2015 மாதத்திற்கான பூச்சி நோய் முன்னறிவிப்பு

பொதுவாக விவசாயப் பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் தங்கள் பயிர்களில் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

**சொர்ணவாரி, கார் மற்றும் குறுவை பருவ நெல் பயிரிடும் விவசாயிகள் கவனத்திற்கு:**

**நாற்றாங்கால் செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள்:**

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த

அ) ஈர விதை நேர்த்தி:

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.

2. நெல் நாற்றங்காலைப் பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

**3. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இந்தத் தேங்கிய நீரில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நெற்பயிரில் பூச்சி மேலாண்மை**

1. நாற்றங்காலில் அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 செண்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5% தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.
4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் பாஸ்போமிடான் 40 SL – 50 மிலி / 20 சென்ட் அல்லது மானோகுரோட்டோபாஸ் 30 EC 40 மி.லி/20 செண்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் மேலாண்மை**

பருவமழை மேலும் தாமாதமானால் வறட்சி தொடர வாய்ப்புள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் பலவகையான மாவுப்பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.

இவற்றை மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து (5 பொறி, ஏக்கருக்கு) கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணைய் சோப் 1 கிலோ 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

**தகவல்:**

பயிர் பாதுகாப்பு மையம்,
வேளாண் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர் - 641 003.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்